**அசல் வழக்கு எண். 124/2019 நாள்: 16.07.2025**

**வா.சா.1 திரு. வீரமணி**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) வழக்கு தாக்கல் செய்வதற்கு நான்தான் வழக்கறிஞருக்கு தகவல் கூறினேனா என்றால் ஆமாம். பிராதில் தாவா சொத்து காலிமனை என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வாங்கியபிறகு அதில் கூரைவீடு கட்டினேன். எப்போது கூரைவீடு கட்டினேன் என்றால் 2019–ல் கட்டினேன். பிரதிவாதி லோகநாதன் என்பவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதியின் அப்பா பெயர் நாகமுத்து என்றால் சரிதான். நாகமுத்து என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் தெரியாது. தாவா சொத்து ஆரம்பத்தில் ராதாகிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) அன்பரசன் யார் என்றால் சிலம்பரசன் என்பவரின் தகப்பனார் ஆவார். அன்பரசனின் அப்பா பெயர்தான் ராதாகிருஷ்ணன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வடக்கில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக இடம் உள்ளது என்றால் இடம் உள்ளது அது பூர்வீக இடமா என்று தெரியாது. எனது பூர்வீகம் எது என்றால் கீழத்திருப்பூந்துருத்தி. பிரதிவாதியின் இடத்திற்கு வடக்கில் ரவிசந்திரன் இடம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியும் ரவிசந்திரனும் அண்ணன் தம்பி என்றால் சித்தப்பா பெரியப்பா மகன்கள். அன்பரசனுக்கு 2 மனைவிகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) சொத்து வாங்கும்போது விசாரித்தேனா என்றால் இல்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம், சிலம்பரசன் அவருக்குரிய பாகமான தாவா சொத்தை என்னிடம் விற்றதாக சொன்னார். ஆரம்பத்தில் தாவாசொத்து அன்பரசனின் 2வது மனைவி மூலமாக பிறந்தவர்களுக்கும் பாத்தியப்பட்டது என எனக்கு தெரிந்தா என்றால் வில்லங்க சான்று பார்த்தபோது சிலம்பரசன் பெயர் வந்தது. எனது தரப்பு ஆவணங்கள் அனைத்தையும் தாக்கல் செய்துவிட்டேனா என்றால் ஆமாம். சிலம்பரசன் பெயரிலுள்ள பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் சிலம்பரசன் பெயரிலுள்ள பத்திரமும் உள்ளது.

4) நான் சொல்வதுபோல் சிலம்பரசன் பெயரிலுள்ள பத்திரமோ, வில்லங்க சான்றிதழோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1–ல் வழக்கு சொத்து சிலம்பரசனுக்கு பூர்வீக சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்/
திரு.P. ரமேஷ், B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.